**செய்தி வெளியீடு எண்–754** **நாள்– 13.9.2008**

## செய்திக் குறிப்பு

நெடுஞ்சாலைத் துறை, சென்னை– 9.

இன்று (13.09.2008) நெடுஞ்சாலைத் துறையின் பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு வெள்ளக்கோவில் மு.பெ. சாமிநாதன் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் திரு கா. அலாவுதீன் அவர்களால் நடத்தப்பட்டது.

2008 – 2009 நடப்பு ஆண்டில் நெடுஞ்சாலைத் துறைக்கு திட்டப் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.2791 கோடியில் ஆகஸ்ட் மாதம் முடிய ரூ.963 கோடி செலவிடப்பட்டுள்ளது. இது மொத்த ஒதுக்கீட்டில் 34.50% விழுக்காடுகளாகும். திட்டம் சாரா பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.337 கோடியில், ரூ. 201 கோடி செலவிடப்பட்டுள்ளது. மேலும், நடப்பாண்டில் 681 பாலங்கள் ரூ.2172 கோடியில் நடைபெற்று வருகின்றன. இந்த ஆய்வுக் கூட்டத்தில் சுனாமி நிவாரணத் திட்டம், பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம், பகுதி II திட்டம், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ் நடைபெறும் சாலை மற்றும் பாலப் பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யப்பட்டு, அனைத்து சாலைப் பணிகளும் டிசம்பர் 2008–க்குள்ளும், பெருவாரியான பாலப் பணிகளை மார்ச்சு 2009–க்குள் முடிக்க அறிவுறுத்தப்பட்டது.

கடந்த ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வரின் பிறந்த நாளையொட்டி துவங்கப்பட்ட மரக் கன்றுகள் நடும் திட்டத்தின்கீழ் இதுவரை 4 இலட்சம் மரக் கன்றுகள் நடப்பட்டுள்ளன. இத்திட்டத்தை இந்த ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்த அறிவுறுத்தப்பட்டது.

மேலும், கடந்த ஆண்டு மாநில நெடுஞ்சாலைகளில் சாலைகளின் எல்லைகளை அறுதியிட்டு எல்லைக் கற்கள் நடப்பட்டன. இந்தப் பணி நடப்பாண்டில் 9451 கி.மீ. நீள மாவட்ட முக்கிய சாலைகளிலும் விரிவுபடுத்தி செயல்படுத்த அறிவுறுத்தப்பட்டது.

தென்னாட்டு காந்தி பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு விழாவினை நமது தமிழக முதல்வர் அவர்களின் தலைமையில் அமைந்துள்ள அரசு மிகவும் சிறப்புடன் கொண்டாடி வருகிறது. அதனைத் தொடர்ந்து நெடுஞ்சாலைத் துறையின் கீழ் வரும் தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகளில் அமைக்கப்பட்டுள்ள பலகைகளில் சமுதாயத்திற்கு பயனளிக்கும் பேரறிஞர் அண்ணா அவர்களின் பொன் மொழிகளை அனைவரும் அறிந்து பயன்பெரும் வண்ணம் எழுதுவது என இந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. உலகம் போற்றும் பேரறிஞர் அண்ணா அவர்களின் பொன் மொழிகளான

1. ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்!
2. கடமை! கண்ணியம்! கட்டுப்பாடு!
3. கண்ணியம் தவறாதே! திறமையைக் காட்டு!
4. எதையும் தாங்கும் இதயம் தேவை!

5. மலர் போல சிரித்து, குறள் போல வாழு!
6. உலகம் உழைப்பவர்களுக்கே! சோம்பேறிகளுக்கல்ல!
7. நமது வியர்வையிலும், உழைப்பிலும் உள்ளதுதான் முன்னேற்றம்!
8. அறிவும் ஆற்றலும் வெற்றிக்கு வழி!
9. ஜனநாயகத்தில் நாம் எல்லோரும் மன்னர்!
10. வீடு எப்படியோ அப்படியேதான் நாடும் இருக்கும்!

போன்ற பொன்மொழிகள் சாலை ஓர பலகைகளில் விரைவில் இடம் பெறவுள்ளது. இதனால் பொது மக்களும் குறிப்பாக இளைஞர்கள், மாணவ மாணவியர்கள் பேரறிஞர் அண்ணா அவர்களின் பொன் மொழிகளை அறிந்து அதன்படி நடந்து முன்னேறுவார்கள் என்பது நிச்சயம். இப்பணியினை தமிழக நெடுஞ்சாலைலத துறை விரைவில் தமிழகமெங்கும் செயல்படுத்தவுள்ளது என்பதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் நெடுஞ்சாலைத் துறை (பொது) அலகின் தலைமைப் பொறியாளர் திரு அ. கபீர் அகமத் மற்றும் கண்காணிப்புப் பொறியாளர்களும் கோட்டப் பொறியாளர்களும் கலந்து கொண்டனர்.

******

**வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.**